செ.கு.எண்: 12 நாள்:- 9.1.2013

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**

**அறிக்கை – 9.1.2013**

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், நெய்தாளபுரம் கிராமத்தைச் சேர்ந்த சென்னெஞ்சன் என்பவர் 1.1.2013 அன்று மாடு மேய்க்க சென்ற போது, காட்டு யானை தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 3.1.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், குத்தியாலத்தூர் தரப்புக்குட்பட்ட அக்கிசிவன்தொட்டி என்ற இடத்தைச் சேர்ந்த ரங்கசாமி என்பவர் 5.1.2013 அன்று காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த சென்னெஞ்சன் மற்றும் ரங்கசாமி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் காலமான சென்னெஞ்சன் மற்றும் ரங்கசாமி ஆகியோரின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9